දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543
දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135300/ 2135410/ 2135412 / 2135413
E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk

*எனது இல. : SEC/2021/06* *செப்டெம்பர் 17, 2021*

**"*2021 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீது வரியைச் செலுத்தி சட்ட விலக்களிப்புகளை எதிர்பார்க்கும் ஆட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் வெளிப்படுத்துகயைக் கோப்பிடுதல் தொடர்பான வழிகாட்டல்*"**

*2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 5 இன் உட்பிரிவு 2 இற்கமைவாக (இதற்கு பின்னர் நிதிச்சட்டம் எனக் குறிப்பிடப்படும்), நிதிச்சட்டத்தின் பிரிவு 6 இன் கீழ் சில சட்ட விலக்களிப்புகளை எதிர்பார்க்கும் தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீது வரி செலுத்துகின்ற ஆள் ஒருவரால், தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீது வரி செலுத்தும் முறை மற்றும் வெளிப்படுத்தலைக் கோப்பிடும் முறை பற்றிக் குறிப்பிட்டு பின்வரும் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 2021 செப்டெம்பர் 17 இல் குறிப்பு இல SEC/2021/07 இன் கீழ் வழங்கப்பட்ட* ***தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீது வரிவிதித்தலுக்கான விளக்கக்குறிப்பினை*** *வாசிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.*

**1. வரி செலுத்துதல்**

*a) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட* ***வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தினை (TIN)*** *ஏற்கனவே வைத்திருக்கும் ஒரு வெளிப்படுத்துபவர், தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரி செலுத்துவதற்கு அதே வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பயன்படுத்த முடியும்.*

*b) இதற்கு முன்னர்* ***வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றிராத*** *வெளிப்படுத்துபவர், தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரியைச் செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுக்கொள்ளவேண்டும்.*

*பின்வரும் முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தி வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுக்கொள்ள முடியும்.*

*i. உள்நாட்டு இறைவரி திணைக்கள (IRD) இணையத்தள முகப்பின் இலத்திரனியல் சேவை ஊடாக விண்ணப்பித்தல்.*

**இ-சேவைகள் / இ-சேவைகளினை அணுகுதல் / வரிசெலுத்துநர் பதிவு**

*ii. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட "வரி செலுத்துனர் பதிவுக்கான விண்ணப்பப் படிவத்தை" சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களத் தலைமை காரியாலத்தின் ஆரம்பப் பதிவு பிரிவுக்கு அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஏதாவதொரு பெருநகர அல்லது பிராந்திய அலுவலகத்திலும் சமர்ப்பித்தல்.*

*விண்ணப்பப்படிவத்தை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இணையதளத்தில்* **தரவிறக்கம் /படிவங்கள் மற்றும் விபரத்திரட்டுக்கள்/ வரி செலுத்துனர் பதிவு** *இருந்து பதிவிறக்கம் செய்யதுகொள்ள அல்லது மேற்குறிப்பிடப்பட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்பப்படிவத்தில்:*

- வெளிப்படுத்துபவர் வருமான மூலத்தைப் தெரியப்படுத்த விரும்பினால், அதற்கேற்ப பொருத்தமான வருமான மூலத்தைப் அவர் தெரிவு செய்யலாம், இல்லையெனில், அவர் "ஏனையவை" என்பதை தெரிவு செய்யலாம்.

- வெளிப்படுத்துபவர் குறிப்பிட்ட வரிச்சட்டங்களின் கீழ் (2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 102 அல்லது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் பிரிவு 10) அத்தகைய வரி வகைகளுக்கு பதிவு செய்யவேண்டியவர்கள் எனின், அவர்கள் தவிர்த்து ஏனைய தனியாள் வெளிப்படுத்துகையை மேற்கொள்பவர்கள் "வரிவகை பதிவு" (வருமான வரி அல்லது ஏனைய வரிகள்) பதிவு செய்யுமாறு கோரப்படமாட்டார்கள்.

*c)* பின்வரும் முறையில், தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரியினைச் செலுத்துவதற்கு, வெளிப்படுத்துபவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

*(i)* வெளிப்படுத்துபவர்கள் வரியினைச் செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் முறையான கொடுப்பனவு நறுக்கை (*Paying-in-slips* ) பயன்படுத்த முடியும். இலங்கை வங்கியின் ஏதேனுமொரு கிளையிலிருந்தோ அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு பிரிவிலிருந்தோ அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஏதேனுமொரு பெருநகர அல்லது பிராந்திய அலுவலகத்திலிருந்தோ முறையான கொடுப்பனவு நறுக்கினை (*Paying-in-slips* ) பெற்றுக்கொள்ள முடியும்.

*(ii)* தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரியினைச் செலுத்துவதற்கு, கொடுப்பனவு நறுக்கு படிவம் பின்வருமாறு நிரப்பப்பட வேண்டும்:-

- வரி வகை குறியீடு - ***28***
- கொடுப்பனவு காலப்பகுதிக் குறியீடு - ***22000***
- கொடுப்பனவு வகை - ***S***
- கொடுப்பனவு கைச்சாத்து குறியீடு - நிரப்பத் தேவையில்லை
- கொடுப்பனவு நறுக்கின் ஏனைய விவரங்களை நிரப்பவும்

*(iii)* உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தில் அமைந்துள்ள அல்லது நாடாளாவிய ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளையில் வரியினைச் செலுத்த முடியும்.

*(iv)* தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரிக் கொடுப்பனவு செய்கின்ற பொழுது, குறித்த தொகையானது இலங்கை ரூபாய் தவிர்ந்த வேறொரு நாணயத்தில் வெளிப்படுத்தப்படும் போது, அத்தொகையானது கொடுப்பனவு செய்யும் தினத்தில் குறித்த நாணயத்திற்கும் இலங்கை ரூபாய்க்கும் இடையில் பொருத்தமான நாணய மாற்று விகிதத்தின் படி இலங்கை ரூபாயில் கணக்கிடப்பட வேண்டும். கணக்கிடப்பட்ட சமமான தொகையின் 1.0 சதவிகிதத்தில் வரியினைச் செலுத்த முடியும்.

*(v)* வெளிப்படுத்துகை படிவத்தின் பந்தி 2 இன் அட்டவணையின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட மொத்தத் தொகை / சந்தை பெறுமதியில் 1% வீதத்தை தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீதான வரியாக செலுத்த வேண்டிய தொகையாகக் கணிப்பிடுதல் வேண்டும்..

**2. வெளிப்படுத்துகையைக் கோப்பிடுதல்**

*a)* பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் இணையத்தள முகப்பில் ***தரவிறக்கம் /படிவங்கள் மற்றும் விபரத்திரட்டுக்கள்/ தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வாற(TVD)*** ஊடாக பிரகடனப்படிவத்தை தரவிறக்கம் செய்து பிரகடனத்தை செய்ய முடியும். பிரகடனத்தின் 4ஆம் பந்தியில் கொடுப்பனவு குறிப்பிலக்கமாக வரி அடையாள இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

b) உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட பிரகடனப்படுத்தல் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்குமாறு பிரகடனப்படுத்துபவர்கள் வேண்டப்படுகின்றார்கள்

- கொடுப்பனவு நறுக்கின் (*Paying-in-slips* ) போட்டோ பிரதி
- தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
- பிரகடனப்படுத்துபவர், நிதிச்சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் உட்பிரிவு 3(b) இன் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அல்லது உட்பிரிவு 3(c) இன் கீழ் வழங்கப்பட்ட நிராகரிப்பு கடிதத்தை, பிரகடனத்தில் குறிப்பிடப்படாத வேறொரு முகவரிக்கு பதிவுத் தபாலில் பெற்றுக்கொள்ள எண்ணினால், அந்த விபரங்களுடன் வேண்டுகோள் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்ட சொத்தின் உடைமையை நிரூபிப்பதற்கான நம்பத்தகுந்த ஆவணம், சொத்து கொள்வனவு செய்த திகதி மற்றும் சொத்தின் கிரயம் அல்லது சந்தைப்பெறுமதி (உதாரணம்: ஆவணங்களின் பிரதி அவையாவன, உறுதிகள், ரசீது/பற்றுச்சீட்டுக்கள், வைப்புச் சான்றிதழ்கள், பங்குசான்றிதழ்கள், உரிய வங்கிகள், நிதி அல்லது ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்கள், உரிய கடன்பட்டோரால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்கள், கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தல்கள் (வருமானவரி நோக்கத்திற்காக ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்), காப்புறுதி நோக்கத்திற்கான மதிப்பீடுகள், தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை, சுதந்திர அமைப்பு அல்லது அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை)

c. உரியவாறு முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட பிரகடனம் அதன் இணைப்புக்களுடன் ஆணையாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டு, ஆணையாளர், வரிக்கொள்கை மற்றும் சட்டப்பிரிவு, 14 வது மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு மார்ச் 31, 2022 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் மூடிய உறையில் நேரடியாக அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

எச்.எம்.டபில்யூ.சி.பண்டார
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

H. M. W. C. Bandara
Commissioner General
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mw
Colombo 02

பிரதிகள்:
1. செயலாளர், நிதி அமைச்சு
2. சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம்
3. கணக்காய்வாளர் தலைமையதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்